**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.54** **நாள்: 07.03.2019**

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட நுங்கம்பாக்கத்தில் அடுக்குமாடி வாகன நிறுத்தம் அமைக்கும் பணிக்காக பொதுமக்களின் கருத்து கேட்புக் கூட்டம் நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சி, நுங்கம்பாக்கம், உத்தமர் காந்தி சாலையில் அடுக்குமாடி வாகன நிறுத்தம், வணிக வளாகம் மற்றும் அலுவலகக் கட்டடங்கள் ஆகியவை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சுமார் 27,664 சதுர அடியில் கட்டப்படும் இந்தக் கட்டடத்தில் இரண்டு அடித்தளங்களில் 320 இருசக்கர வாகன நிறுத்தம், தரைத்தளத்தில் 50 நான்கு சக்கர வாகன நிறுத்தம் மற்றும் முதல் மாடி முதல் 5வது மாடி வரை 188 நான்கு சக்கர வாகன நிறுத்தம் மற்றும் வணிக வளாகமும் மற்றும் 5வது மாடி முதல் 13வது மாடி வரை வணிக வளாகங்களாவும், அலுவலகங்களாகவும் செயல்படும் வகையிலும் வடிவமைக்கப்பட உள்ளது.

இந்த அடுக்குமாடி வாகன நிறுத்தம், வணிக வளாகம் மற்றும் அலுவலகக் கட்டடங்கள் அமைப்பது குறித்த பொதுமக்களின் கருத்து கேட்புக் கூட்டம் தேனாம்பேட்டை மண்டல அலுவலகத்தில் 05.03.2019 அன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மேற்கண்ட திட்டத்தைப் பற்றி விரிவாக விளக்கப்பட்டு விவாதிக்கப்பட்டது. பொதுமக்கள் அனைவரும் இத்திட்டம் வரவேற்கத்தக்கது என்றும், விரைவில் இப்பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வரவேண்டும் எனவும், இதேபோன்று சென்னையின் பிரதான இடங்களில் மாநகராட்சி வாகன நிறுத்தங்களை அமைக்க வேண்டுமென கேட்டுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், மேற்பார்வை பொறியாளர் (கட்டடம்) திரு.பி.துரைசாமி, செயற்பொறியாளர்கள், ஸ்மார்ட் சிட்டி தலைமை நிர்வாக அதிகாரி, TNUIFSL மேலாளர், JLLன் அலுவலர்கள், குடியிருப்போர் நலச் சங்கங்களை சேர்ந்தவர்கள் மற்றும் அப்பகுதி பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**